


நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக செம்பாக்கம் தெற்கு பகுதி தி.மு.கழக சார்பில் நடைபெற்ற கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்ற குழு தலைவருமான டி.ஆர்.பாலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, தலைமை கழக பார்வையாளர் ஆர்.தசரதன் மற்றும் பகுதி செயலாளர் இரா. சுரேஷ் உள்ளிட்டோர் உள்ளனர்.




மதுரை வழக்கறிஞர் சங்கம் சார்பில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில் முன்னாள் அமைச்சரும் தமிழ்நாடு சட்டப் பேரவை சபாநாயகரும் முதுபெரும் வழக்கறிஞருமான பண்பாளர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் திருவுருவப்படத்தினை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் ராஜா திறந்து வைத்தார். உடன் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், ருக்மணி பழனிவேல்ராஜன், முதன்மை மாவட்ட நீதிபதி சிவகடாட்சம், வழக்கறிஞர் சங்க தலைவர் நெடுஞ்செழியன், செயலாளர் மோகன் குமார், பொருளாளர் கணேசன் மற்றும் மூத்த வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வரின் அறிவுறுத்தலின்படி அதிகரித்து வரும் மின் தேவையை கருத்தில் கொண்டு

# போர்க்கால அடிப்படையில் தமிழ்நாடு மின் வாரியம் செயல்படுகிறது!

## மறைமலை நகரில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்குப் பின்னர் அமைச்சர் செந்தில்பாலாஜி பேட்டி!

சென்னை, மே 21 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி அதிகரித்து வரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் பாதிக்காத வண்ணம் போர்க்கால அடிப்படையில் தமிழ்நாடு மின் வாரியம் செயல்பட்டு வருகிறது என்று அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.



அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது :-

தமிழ்நாட்டின் ஒப்பற்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளில் இதுவரை தமிழ்நாடு முழுவதும் பழுதடைந்த மின் கம்பங்கள் துறையின் வாரியாக கணக்கெடுக்கப்பட்டு 95,000க்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் புதிதாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. அதேபோல, தமிழ்நாடு முழுவதும் குறைந்த மின் அழுத்தம், அதிக மின் பளு எந்தெந்த மின்மாற்றிகளில் இருக்கிறது என்பதை கணக்கெடுத்து ஒட்டுமொத்தமாக இரண்டு ஆண்டுகளில் 40,020 புதிய மின் மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. புதிய மின் தேவைகளை கணக்கிலே கொண்டு 388 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல, கூடுதல் மின் உற்பத்திக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்கான உத்தரவுகளையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

ஒட்டுமொத்தமாக, சட்டமன்றத்தினுடைய கூட்டத்தொடரில் தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளிலும் தொகுதிகள் வாரியாக செய்யப்பட்ட பணிகள் புத்தகமாக அச்சிடப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. அந்தந்த தொகுதிகளில் நடைபெற்றப் பணிகளை அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது, இருந்தும் கூட, இப்பொழுது கோடைகாலம் இந்த கோடை காலத்தில் தற்போது தமிழ்நாட்டினுடைய மின் நுகர்வு என்பது அதிகமாக உயர்ந்திருக்கின்றன. குறிப்பாக 2021க்கு முன்பாக 16,000 மெகாவாட் இருந்த உச்ச நிலை என்பது இப்போது 19,387 மெகாவாட் அளவிற்கு உயர்ந்திருக்கின்றன.

சென்னையை பொறுத்த வரை 66 மில்லியன் யூனிட் என்ற ஒரு நாள் நுகர்வு என்பது 90 மில்லியன் யூனிட் அளவிற்கு உயர்ந்துள்ளது. எனவே, இந்த உயர்வுகளின் காரணமாக கோடை காலத்தில் அதிகரிக்கின்ற மின் தேவையின் காரணமாக ஏறத்தாழ 4 இலட்சம் மின் மாற்றிகளில் ஒன்று அல்லது இரண்டில் பழுது ஏற்படும் போது உடனடியாக சென்று மின் வாரியத்தினுடைய அலுவலர்கள், அதிகாரிகள் அந்த சம்பவ இடத்திற்கு சென்று பாராமரிப்பு பணிகளை மேற்கொண்டு உடனுக்குடன் மின் விநியோகம் செய்யப்படுகிறது. குறிப்பாக, காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஏற்கனவே பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றி அமைக்கப்பட்டது, புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டதை தொடர்ந்து இன்னும் பல்வேறு கோரிக்கைகளை இந்த ஆய்வு கூட்டத்திலே முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கைகள் எல்லாம் ஒரு மாத காலத்திற்குள் விரைவாக முடிக்கப்பட வேண்டும் என்று துறையினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்கள் பொறுத்தவரை வளர்ந்து வரக்கூடிய தொழில் நகரமாக மாறி வரக்கூடிய மாவட்டங்களாக அமைந்திருக்கின்றன. இங்கு கூடுதல் மின் தேவை அதிகரித்து வருகின்றன. அதை கவனத்திலே கொண்டு சிறப்பு ஆய்வு பணிகளை மேற்கொண்டு அந்த பணிகள் உடனுக்குடன் சரிசெய்வதற்கு துறையினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன.

நேற்று ஒரு நாளில் மட்டும் 26 இலட்சம் யூனிட் மின்சாரம் தமிழ்நாட்டில் உபரியாக இருக்ககூடிய மின்சாரம் வெவ்வேறு மாநிலத்திற்கு யூனிட்டிற்கு 9 ரூபாய் 76 பைசாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. வேறு மாநிலங்களுக்கு மின்சாரத்தை வழங்கும் அளவிற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் வளர்ந்திருக்கிறது. மற்ற இடங்களுக்கு உச்சபட்ச தேவையாக இருக்கிறது.

சென்னையை பொறுத்த வரைக்கும் பாத்தோமேயானால் வெறும் 66 மில்லியன் யூனிட்டில் இருந்து 90 மில்லியன் யூனிட் அளவிற்கு உயர்ந்திருக்கிறது, இதையெல்லாம் கவனத்திலே கொண்டு பணிகள் மிக வேகமாக செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சென்னையை கவனத்தில் எடுத்துக்கொண்டால் 4,700 RMU புதிதாக இரண்டு ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ளன. 3,447 புதிய மின் மாற்றிகள் சென்னையில் மட்டுமே நிறுவப் பட்டிருக்கின்றன. 3,000 கிலோமீட்டர் அளவிற்கு புதிதாக யு.ஜி கேபிள் அமைக்கப்பட்டுள்ளன.

இருந்தாலும் கூட இன்னும் 20, 30 சதவீதம் பணிகள் செய்யவேண்டி இருக்கிறது, அதையும் கவனத்தில் கொண்டு வரக்கூடிய இந்த கோடைக்காலம் முடிந்த பிறகு வரக்கூடிய நாட்களில் அந்த பணிகள் மிக வேகமாக போர்கால அடிப்படையில் செய்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியுள்ளார்கள், மிக விரைவாக அந்த பணிகளை அமைச்சர் அவர்களின் தலைமையில் இந்த ஆய்வு பணிகள் நடைபெற்று முடிந்திருக்கிறது.

காலிப்பணியிடங்கள் நிரப்புவதற்காக பொறியாளர்களை பொறுத்தவரை இப்பொழுது, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களை நிரப்புவதற்கு அனுமதிகளை வழங்கியிருக்கிறார்கள். மீதம் இருக்க கூடிய மிக முக்கியமான எந்தெந்த பணியிடங்கள் தேவை என்பதை கணக்கிட்டு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு விரைவாக எடுத்து செல்ல இருக்கின்றோம். முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அதற்கான நடவடிக்கை நிச்சயமாக துறை ரீரியாக எடுக்கப்படும்.

முதல் கட்டமாக சென்னை மாநகராட்சியின் பகுதிகளில் முழுவதுமாக புதைவட கேபிள்கள் அமைக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. ஒரு 7 கோட்டங்களில் பணி நிலுவையில் உள்ளது, அது இப்பொழுது சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டுள்ளன. மற்ற மாநகராட்சிகளில் விரிவு படுத்தப்பட்டதற்கு பிறகுதான் பேரூராட்சிகளில் உள்ள குறையை கவனத்தில் கொள்ளலாம்.

தொடந்து அதுபோன்ற நிகழ்வுகள் நடந்துகொண்டு தான் இருக்கிறது. எப்படி மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று துறையின் சார்பாகவும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றன. தொழில் வளர்ச்சி இரண்டு ஆண்டுகளில் அபரிமிதமாக தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறுகின்ற திராவிட மாடல் ஆட்சியில் வளர்ந்து வருகின்றன. அதிலேதான் இப்போது உற்பத்தி அதிகரிக்கின்றபோது நமது தேவைகளும் அதிகரித்து வருகிறது. அதற்கு தான் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களை செயல்படுத்தக்கூடிய உத்தரவுகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

டாஸ்மாக்கை பொறுத்தவரை சில நிர்வாக ரீதியான, சில சீர்திருத்தங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்வதாக வரக்கூடிய செய்திகளும் அல்லது முழு நேரம் செயல்பட்டு வரக்கூடிய புகார்களை அதன் மீது நடவடிக்கைகளை எடுக்கின்றபொழுது அதற்கு வேற பாடங்கள் கற்பிக்கப் படுகிறது. மால் ஷாப்பில் ஆட்டோமேட்டிக் வெண்டிங் இயந்திரம் வைத்தால் கூடுதல் விலைக்கு விற்பனை செய்வது தடுத்து நிறுத்தப்படும். ஆட்டோமேட்டிக் வெண்டிங் இயந்திரம் கடையினுடைய உள்புறத்தில் வைக்கிறார்கள். அதை இரல்வே நிலையங்களிலோ, பேருந்து நிலையங்களிலோ ஏடிஎம் இயந்திரம் போல் வைக்க போகிறார்கள் என்ற செய்திகள் சித்தரித்து வெளியிடப் படுகின்றன. இதை நிர்வாக ரீதியாக அதை நடைமுறைக்கு கொண்டு வரும் போது உற்பத்தி தொடங்கி கடைசி விநியோகம் வரை கூர்ந்து கவனிக்ககூடிய வகையில் அது முடியும்.

டாஸ்மாக் கடைகளை தவிர வேறு இடங்களில் மொத்தமாக பாட்டில்கள் பறிமுதல் செய்யும்பொழுது எந்த கடையில் இருந்த அந்த பாட்டில்கள் ஒட்டு மொத்தமாக பெற்றார்கள் என்று எடுத்து பார்க்க முடியும். இதுபோன்ற சீர்திருத்தங்களை செய்கின்றபொழுது தான் சில கருத்துக்கள் விபரீதமான கருத்துக்கள், சில உண்மைக்கு மாறான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. எனவே, 1,977 பேர் கூடுதல் விலைக்கு விற்பனை செய்தவர்கள் மீது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூ.5.5 கோடி அளவிற்கு அபராதம் விதிக்கப் பட்டுள்ளது. வரக்கூடிய நாட்களின் இன்னும் சீர்திருத்தங்களை செய்து சிறந்த முறையில் நீங்கள் சொல்லக்கூடிய இந்த குறைகள் எல்லாம் இல்லாத அளவிற்கு மிகத் திறமையான ஒரு நல்ல நிர்வாகத்தை இன்னும் இரண்டொரு மாதங்களில் சிறப்பாக ஏற்படுத்தலாம்.

வழிபாட்டு தளங்களுக்கு அருகே இருக்கக்கூடிய கடைகள், பொதுமக்களுக்கு வேண்டாம் என்று சொன்ன இடங்கள், அதே போல கல்வி நிறுவனங்களுக்கு அருகில் இருக்கக்கூடிய கடைகள் இதெல்லாம் கணக்கெடுக்கப்பட்டு துறை ரீதியாக அறிவிப்பு இல்லாமலே 96 கடைகள் மூடப் பட்டிருக்கின்றன. நாளை அல்லது நாளை மறுநாள் ஆய்வு செய்து பொதுமக்கள் விரும்பவில்லை என்றால் அந்த இடத்தில் இருந்தும் கடைகள் மூடப்படும்.

நிர்வாக ரீதியாக இப்போது மின்சார வாரியமாக இருக்கட்டும் அல்லது மற்ற துறைகளாக இருக்கட்டும் நீங்கள் சொல்லக்கூடிய கருத்துக்கள் துறையின் கவனத்திற்கு கொண்டுவரக்கூடிய அளவில் இருந்தால் அது நிச்சயமாக அரசு கவனத்திலே கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

## மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 26-05-2023 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது (இரா.கிரிராஜன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.5.2023

**இரா.கிரிராஜன், எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு




மாதவரம் வடக்குப் பகுதி இளைஞரணி சார்பில் 16வது வட்டத்தில் நடைபெற்ற சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் மாவட்டச் செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கொறடா முனைவர் கோவி.செழியன், பசும்பொன் ரவிச்சந்திரன் சிறப்புரையாற்றினார். புழல் நாராயணன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் உடனுள்ளனர்.

செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டங்களில்

# சீரான மின் விநியோகம் தொடர்பான ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - வி.செந்தில்பாலாஜி பங்கேற்பு

சென்னை, மே 21 -

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பா லாஜி ஆகியோர் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் சீரான மின் விநியோகம் வழங்குவது தொடர்பான சிறப்பு ஆய்வு கூட்டம் மேற்கொண்டார்கள்.

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையிலும், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில்பாலாஜி அவர்கள் முன்னிலையிலும், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் சீரான மின் விநியோகம் வழங்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மின்சார வாரிய அலுவலர்களுடன் நடைபெற்ற சிறப்பு ஆய்வு நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை மனுவினை அமைச்சர் பெருமக்கள் பெற்றுக்கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் (காஞ்சிபுரம்), சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர் (உத்திர மேரூர்), இ.கருணாநிதி (பல்லாவரம்), திருமதி. வரலட்சுமி மதுசூதனன் (செங்கல்பட்டு), சி. வி.எம்.பி.எழிலரசன் (காஞ்சிபுரம்), எஸ்.எஸ்.பாலாஜி (திருப்போரூர்), மு.பாபு (செய்யூர்), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இயக்குநர்/பகிர்மானம் மா.சிவலிங்கராஜன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் ஆ.மனோகரன்,

செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திருமதி.செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி. மகாலட்சுமி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் காமராஜ், மறைமலைநகர் நகராட்சி மன்ற தலைவர் ஜெ.சண்முகம் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி மன்ற தலைவர் திருமதி. தேன்மொழி நரேந்திரன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத் வரவேற்புரையும் காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் சிவருத்திரய்யா நன்றி கூறினார்.

எ.நாகராசன் -ஐ.சி.எஃப்.வ.முரளிதரன் வரவேற்பில்

# கொளத்தூர் 65 அ வட்டச் செயலாளர் என்.பவுல்ராஜ் இல்ல மணவிழா வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

சென்னை, மே 21 -

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் - இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் மேற்குப் பகுதி 65 அ வட்டக் கழகச் செயலாளர் என்.பவுல்ராஜ் - பி.ஆலயமேரி ஆகியோரின் மகள் பி.ஜெசினா ரோஸ் - எம்.ஜேம்ஸ் - ஜெ. எஸ்தர் செல்வராணி ஆகியோரது மகன் ஜெ.மைக்கேல் ராஜ்பாரதி ஆகியோரது திருமண வரவேற்பு விழா இன்று (21.5.2023 -ஞாயிறு) மாலை 6.30 மணிக்கு திரு.வி.க.நகர் பேருந்து நிலையம் காமராஜர் மாளிகையில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பிற்கு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி. கே.சேகர்பாபு முன்னிலை வகித்து வாழ்த்துகிறார்.

பகுதிச் செயலாளர்கள் எ.நராகாசன் எம்.சி., ஐ. சி.எஃப். வ.முரளிதரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் மேயர் பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டதிட்ட திருத்தக்குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., ப.ரங்கநாதன், எம்.எல்.எ.க்கள் ப.தாயகம்கவி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றி அழகன், இ.பரந்தாமன் மற்றும் கே.சந்துரு, சரிதா மகேஷ்குமார் எம்.சி. தேவஜவகர், கவிஞர் நன்மாறன், சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரை கண்ணன், ஆர்.எஸ்.சித்திக்,

மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன், ஜி.எம். தேவன், புனிதவதி எத்திராஜ், இசட் ஆசாத், கூ.பி. ஜெயின், வே.வாசு, மு.சாமிக்கண்ணு, செ.தமிழ்வேந்தன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜன், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், சொ.வேலு, வி.சுதாகர்,

இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, ந.முத்துவேல், என்.சௌந்தர், எம்.ஜெ.சி.பாபு, பி. அதிபதி, எஸ்.முருகன், எம். டி.தமிழ்செல்வன், என். ராமச்சந்திரன், பி.பழனி, ச.இளங்கோவன், எஸ்.கே. ரமேஷ், எல்.டி.தாமஸ், எஸ். தனசேகர், பா.அன்பரசு, டி. சந்திரசேகர், பி. ஊமைதுரை, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி. ரவி, என்.பொன்முடி, கே.பி.ஆதவன்மணி, கே.சாரதா, எம்.தாவூத்பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, டி. யோகபிரியா,

எஸ்.சம்பத்குமார், அ. கன்னியப்பன், எம்.நாகராஜன், ஆர்.சொக்கலிங்கம், ஜெ.சரவணன், டி.ஏ.ராஜன், ஆர். ஆரோக்கியதாஸ், ரவிச்சந்திரன், மோகனசுந்தரம், ராஜசேகர், வெங்கடமூர்த்தி, எஸ்.டி.பாஸ்கர், க.விஜயரங்கம், சதீஷ்பாபு, கோ.பொன்னிவளவன், ஜி.



செல்வம், பி.வெங்கடேசன், எம்.துளசி, எஸ்.முரளி, சி. சந்திரசேகர், கே.சந்தானம், பொன்.புகழேந்தி, எஸ்.சம்பத்குமார், அ.கன்னியப்பன், எம்.நாகராஜன், ஆர்.சொக்கலிங்கம், ஜெ.சரவணன், டி.ஏ.ராஜன், ஆர்.ஆரோக்கியதாஸ், என்.ரவிச்சந்திரன், ஆர்.மோகனசுந்தரம், ஏ. எம்.ராஜே, ஜே.வெங்கடமூர்த்தி, எஸ்.டி.பாஸ்கர், க.விஜயரங்கம், எஸ்.பி. சதிஷ்பாபு, கோ.பொன்னிதுசெல்வன். எஸ்.முரளி சி.சந்திரசேகர் கே.சந்தானம் பொன். புகழேந்தி,

வி.வளர்மதி, பதிமாநகர் சாந்தி, ஜெ.ஆனந்த், எஸ். கிருபாகரன் ,புவனசுந்தரம், ஜே.வினாத்குமார், ஜே.சீனிவாசன், PTC.ரமேஷ், அவ்வை.கஜேந்திரன், டி. தேவராஜ், ஆர்.எஸ்.ரபீக், கே.கார்த்திக், எல்.ராமச்சந்திரன், என்.ஆர்ஜுனன், எஸ்.பி.மனோஜ், எஸ். ஸ்ரீநாத், எஸ்.லட்சுமி, எஸ். ஸ்ரீநாத், எம்.இளங்கோ, எஸ்.பிரபு, என்.திலீப், ஏ.தியாகராஜ், ஆர்.சசிதரன், ஆர்.இளங்கோ, திவாகர், டி.சைமன்ராஜ், எம்.அழகேஷ், ஆர்.ஹரிகிருஷ்ணன், ஆர்.மணிகண்டன், டி. சுகேஷ், எஸ்.நவீன், எம். நந்தா, எஸ்.சீனிவாசன், யு.லோகேஷ், என்.மகேஷ்,, எம்.சதீஷ்குமார்,


பி.சுரேஷ், ஏ.எஸ்.செந்தமிழ்ச்செல்வன், பி.அல்லி ராஜன், எஸ்.சுரேஷ்குமார், கே.துர்காபிரசாத், .ஏ.பி. பார்த்திபன், கே.மஞ்சுநாதன், பி.ரோகித்பாபு, எஸ். விஜயகுமார், பி.முத்துகுமார், எஸ்.கவியரசு, வி. தமிழன்பன், ஹரீஷ்குமார், எம்.பி.யுவராஜ், பி.பூபால், குமார், எஸ்.சசிகுமார், கே.சுபாஷினி, எம்.மனோதீபன், வி.வெங்கடேசன், எம்.சுரேஷ், கார்த்திக், டி. ராஜாபிரகாஷ், சந்திரமோகன், எஸ்.சந்திரகலா, ஆர். புவனேஸ்வரி, கே.ஜெயா, பி.அம்சவேணி, எஸ். ஜமுனா, வசியகலா சித்ரா, வி.நாகலட்சுமி, எஸ்.லதா, எஸ்.சிவகாமி, பி.சிவசங்கரி, எம்.சுதா,

கலைவாணி, கே.செல்வி ,ராகண்ணம்மா, க.லதா, ஆர்.வளர்மதி, எஸ்.செல்வி, ஜி.விஜயலட்சுமி, ஏ.மல்லிகா மற்றும் பலர் வாழ்த்துகின்றனர்.

என்.வி.நாராயணன், ஆனந்தநாராயணன், வி.ராஜ்குமார், சர்மிளா தேவி, டி.நடேஷ்குமார், தாஸ், அண்ணாமலை, டி. தேவன், ரவிகுமார், பாண்டுரங்கன், புருசோத்தமன், இளங்கோ ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**டாக்டர் இரா. கோவிந்தசாமி**
**மே 21 (1995)**



கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்தே உறுப்பினராகி, சாலவாக்கம் கிளைச் செயலாளராகி பணியாற்றி வந்ததுடன், அருகில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் கழகக் கொள்ளைகளை விளக்கி நாடகங்கள் மூலமாக பிரச்சாரம் செய்து வந்தவர். தலைமைக் கழக பேச்சாளராக திகழ்ந்தவர்.

அறிஞர் அண்ணாவின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட இவர், உத்திரமேரூரில் 1965ல் தனது தலைமையில் மொழிப் போராட்டத்தை நடத்தி, ஆறு மாத சிறைத்தண்டனை பெற்றவர்.

மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, காவல் துறையினரால் கடுமையாக தாக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**